**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 184/2015.**

**வழக்கு சாட்சி – அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முத்தையா. | ஜாதி | |
| தந்தை பெயர் | மூக்கன். | தொழில் விவசாயம். | |
| கிராமம் | கல்லடிப்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 73/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025.

**(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, கல்லடிப்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசயாம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகன். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி (காந்தி ஜெயந்தி அன்று) எனது மகள் செல்வலெட்சுமியும், எனது மருமகன் அழகுராஜாவும் பொருட்கள் வாங்குவதற்காக தேனிக்கு வந்திருந்தார்கள். தேனி, நேருசிலை அருகே உள்ளே சிக்னல் அருகே இருசக்கர வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள். அப்போது, அவர்களுக்குப் பின்னால் இருந்து வந்த கேரளா மாநிலத்தைச் சேர்ந்த லாரி சிக்னல் எதையும் பார்க்காமல் எனது மகள் மற்றும் மருமகன் இருந்த இருசக்கர வாகத்தை மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் எனது மருமகனுக்கு தலை நசுங்கிவிட்டது, எனது மகளுக்கு கை மற்றும் உடம்பில் பலத்தக் காயம் ஏற்பட்டு, இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். இருவரையும் தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தபின்னர், எனக்கு தகவல் சொன்னார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். மேற்படி விபத்து ஏற்படுத்திய லாரியை ஓட்டி வந்த நபர் குறித்து விசாரித்தபோது, அவர்

கேரளாவைச் சேர்ந்த சதீஸ் என்று தெரிந்துகொண்டேன். பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர், நல்லடக்கம் செய்வதற்காகப் இருவரின் உடலையும் பெற்றுக்கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால், விபத்து நடந்த மறுநாள் என்னைப் போலீசார் விசாரித்தார்கள். விபத்து சம்பந்தமாக எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால், செல்லப்பாண்டி கூறினார். நான் எத்தனை மணிக்கு மருத்துவக்குச் சென்றேன் என்றால், இரவு 08.00 மணிக்கு இருக்கும். நான் மருத்துவமனைக்குச் சென்றபோது, அந்தயிடத்தில் செல்லப்பாண்டி இருந்தாரா? என்றால், இருந்தார். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனக்கு எத்தனை மணிக்கு போன் மூலமாகத் தகவல் சொன்னார்கள் என்றால், மாலை 05.00 மணிக்குச் சென்னார்கள். மருத்துவமனையில் செல்லப்பாண்டியுடன், ராஜேந்திரன் உடனிருந்தாரா? என்றால், உடனிருந்தார். யாருடைய போன் மூலம் தகவல் கூறினார்கள் என்றால், பக்கத்துவீட்டுக்காரரின் போன் மூலமாகத் தகவல் கூறினார்கள். விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் எனக்கு எப்படித் தெரியும் என்றால், செல்லப்பாண்டி சொல்லித் தெரிந்துகொண்டேன்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.12.17 14:02:10 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**